தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 141

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை : கார்த்திகை 10உ புதன் (25—11—53) ☆ ☆ ☆ வெளியூர் : கார்த்திகை 11உ வியாழன் (26—11—53)

'வாள் ஏந்துக!'—பார்ப்பனர் முடிவு!

"பல ஜாதிகளை ஒழித்துவிட்டு நான்கே ஜாதிகளாக அமைக்க வேண்டும்"

"நாம் உயர்வு தாழ்வு மனப்பான்மை அற்றவர்கள்!"

'ஆனால் மாணவர் உணவு விடுதிகளில் சைவ உணவு தயாரிக்க பார்ப்பன மடையர்களே வேண்டும்!'

'பார்ப்பனரல்லாதாரின் நஷ்டத்திற்காக' திருச்சியில் கூடிய பரம்பரை வகுப்புவாதிகளின் முதலைக் கண்ணீர்

திருச்சி, நவ. 23—

"பார்ப்பனர்கள் சர்க்கார் வேலையைத் தேடாமல், பக்தியான எளிய வாழ்க்கையை நடத்தினால், திராவிட கழகங்களிலுள்ள 'அன்பர்'கள் நமது 'நண்பர்'களாகி விடுவார்கள். நாம் ஆடம்பரமாக வாழ்வது அவர்களுக்கு எரிச்சலாக இருக்கிறது. அதற்குப் பரிகாரம் தேடுவது நம்மைச் சார்ந்ததே. நம்மில் பலர் டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும், வியாபாரிகளாகவும், அதிகாரிகளாகவும் இருக்கிறோம். ஆனாலும் நம் சுயதர்மத்தை நாமே காப்பாற்றிக் கொள்ள முடியும்; எளிமையாகவும் இருக்க முடியும்,"

என்று, திருக்கோவிலூர் வக்கீல் வி. ஜி. ராமச்சந்திரய்யர் திருச்சியில் நடைபெற்ற பிராமணர் மாநாட்டில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

"தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பனர்கள் திராவிடர்களே என்பதை திராவிட கழகங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஈ. வே. ராமசாமி, அண்ணாதுரை எப்படித் திராவிடரோ, அதேபோல், பார்ப்பனர்கள் ஒவ்வொருவரும் திராவிடரே.

பழங்காலம் தொட்டு விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்தவர்கள் பஞ்ச திராவிடர்கள் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள்.

அதாவது, தெலுங்கர்கள், கன்னடியர்கள், மலையாளிகள், குஜராத்திகள்(?) ஆகியவர்கள் பஞ்ச திராவிடர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன்பாகவே இந்தியாவில் பார்ப்பனர்கள் வாழ்ந்து வந்தனர். எனவே, பார்ப்பனர்கள் அன்னியர்கள் என்று திராவிட கழகங்களைச் சேர்ந்தவர்கள் கூறுவது பொருத்தமற்றது."

"உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மையே நம்மிடம் இல்லை. எந்த மக்களிடமும் நமக்குக் குரோதம் கிடையாது; தர்மத்தை நிலைநிறுத்தும் ஊழியர்களாகத் திகழும் தர்ம சமூகத்தையே சிருஷ்டிக்க நாம் விரும்புகிறோம்."

"பிராமணர் அல்லாதவர்களின் முற்போக்கு தார்மீக இலட்சியங்களை திராவிட கழக—திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் பயமுறுத்தப்படுகின்றன. இதனால் பார்ப்பனர்களுக்கு எதுவும் நட்டமில்லை. பார்ப்பனர்களல்லாத சமூகத்திற்குத்தான் நட்டமாகும்."

"தற்போதுள்ள வகுப்புக் குரோதத்திற்குப் பரிகாரம் ஜாதியை ஒழிப்பதல்ல, அதைப் புனிதமாக்குவதே வழியாகும். கலப்பு மணமே இப் பிரச்சினைக்கு அருமருந்து என ராஜாஜி கூறுவது தவறு. இதனால் கலப்பு சமூகம் ஏற்பட்டு பல பிரச்சினைகள் தோன்றும். இதனால் தரமும் குன்றிவிடும்."

"பார்ப்பனர்களால் சமூகத்திற்கு ஆபத்து ஏற்படுவதாக, திராவிட கழக, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மனப்பிராந்தி கொள்கின்றனர். 1927-ல் சென்னையில், காந்திஜி ஒரு கூட்டத்தில் பேசுகையில், 'நீங்கள் அவசரப்பட்டு பார்ப்பனர்களிடம் உங்களுக்குள்ள ஆத்திரத்தால வெகுகாலமாக இருந்துவரும் பண்பாட்டைக் காலால் மிதிக்க முயற்சிக்கிறீர்கள்; வர்ணாச்சிரம தர்மம், எல்லாவற்றிற்கும் ஒரு பொதுவான ஏற்பாடு,' என்றார். அதற்கும், உயர்வு—தாழ்வு என்ற மனப்பான்மைக்கும் சம்பந்தமில்லை."

மாநாட்டிற்கு தலைமை வகித்த கே. எஸ். ராமசாமி சாஸ்திரி பேசுகையில் கூறியதாவது:—

"பிராமணர்கள் தனித்து வாழ முடியாது; அவர்கள், பிராமணரல்லாதாருடன் இணைந்து வாழ வேண்டும். இது மாதிரி மாநாடுகளை வகுப்புவாதம் என்று கூற

(8-ம் பக்கம் பார்க்க

★★★★★★★★★★★

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 4469-10-5

★★★★★★★★★★★

பலதாரம் மணந்தவருக்குப் பரிசு!

மாஸ்கோ, நவ. 21—

ரஷ்யாவின், உஸ்பெகிஸ்தானில் உயர்தரக் கல்வி அதிகாரிகள் இருவர் பல பெண்களை மணந்திருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டதால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாக 'பிராவ்டா' கூறுகிறது.

காரணம்!

"நாஸ்திகம் நம் நாட்டில் புதிதல்ல; கடவுள் நம்பிக்கை ஏற்பட்ட நாள் முதல் நாஸ்திகம் இருந்துவருகிறது. அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏற்படும் அதிருப்தியே நாஸ்திகம் பரவுவதற்குக் காரணம்,"

—ஐகோர்ட் நீதிபதி டபிள்யு எஸ். கிருஷ்ணசாமி, 'தினமணி,': 23—11—53.

லண்டன், நவ. 24—

தென்னாப்பிரிக்காவில், இந்தியர் நலன்களுக்காக உழைத்து வரும் டாக்டர் யூசுப் தாதுவை, கம்யூனிச தடுப்புச் சட்டத்தின் கீழ், 30 நாட்களுக்குள், 15 சங்கங்களில் வகிக்கும் பதவிகளை அவர் ராஜிநாமா செய்யவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

"நெருங்கினவர்களுக்குத்தானே உதவி செய்ய முடியும்?"

—(:)—

"பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவினாலொழிய முன்னேற முடியாது!"

டி. வி. சுந்தரம் அய்யங்காருக்கு சி. ஆர். பரிவு!

சென்னை டிராம்வேயை, டி. வி. எஸ். லிமிடெட் கம்பெனிக்குக் கொடுக்க, ராஜாஜி திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. தற்போதைய சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து சர்வீசையும், அதிலுள்ள 300 பஸ்களுடன், அக்கம்பெனிக்கே கொடுத்துவிடவும் ராஜாஜி உத்தேசித்திருக்கிறார்.

சிறு சிறு கம்பெனிகளை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு, பெரிய கம்பெனிகள் மட்டுமே ஏகபோகமாகக் கொழுப்பது என்ற அமெரிக்க முறை, சென்னை மாநிலத்தில் மோட்டார் போக்குவரத்து விஷயத்தில் நிதர்சனமாகத் தெரிகிறது.

கொஞ்ச அளவில் பஸ்களையும், லாரிகளையும் வைத்து நடத்தி வந்தவர்கள், இருந்த இடம் தெரியாமல் மறைகிறார்கள், இப்பொழுது இந்தப் போக்குவரத்து முழுவதும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மங்களூர் ஆகியவைகளில் தலைமைக் காரியாலயம் வைத்துக் கொண்டுள்ள 4 கம்பெனிகளிடமே இருக்கிறது. இந்த கம்பெனிகளின் பஸ், லாரி பட்டாளங்கள், மற்ற பஸ், லாரி போக்குவரத்துக்களை முடக்கியே விட்டன.

இந்தக் கைங்கரியத்தில், இவர்களுக்கு சர்க்காரும் உதவி செய்திருக்கிறது என்பதுதான் பெரியவேடிக்கை. இந்தக் கம்பெனிகளின் முதலாளிகள் இச்சைக்கு இசைய நடப்பதில் சர்க்கார் தவறியதே இல்லை.

* * *

டிராம் சர்வீஸ் நின்று, பல மாதங்களாகி, டிராம் கம்பெனிக்கு அளிக்கப்பட்டிருந்த லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டு கூட 2 மாதமாகிவிட்டது. அப்படியிருந்தும் கூட, டிராம்களை ஒரேயடியாக ஒழித்துவிட வேண்டியதுதானா அல்லது வேறு நிர்வாகத்தினிடம் அதை கொடுக்க வகை செய்வதா என்பதை முடிவு செய்யாமல், சர்க்கார் வழவழா கொள்கையை அனுஷ்டிக்கிறார்கள்.

டிராம்வே சர்வீசை மீண்டும் நடத்த தங்களால் ஆன அதிகப்பட்ச பண உதவியை அளிக்க தொழிலாளர்கள் முன்வந்தனர். தங்களுடைய பிராவிடண்ட் பண்டு பணம் ரூ 9 லட்சத்தை கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அப்படி ஒத்துழைக்க முன் வந்தும், அந்த ஒத்துழைப்புக் குரல், ஏறக்குறைய செவிடன் காதில் ஊதிய சங்கு போலதான் ஆயிற்று. பொது மக்களுக்கோ, டிராம்வே தொழிலாளருக்கோ என்னத்தன நன்மையும் இல்லை.

மதுரை டி. வி. எஸ். விஷயத்தில் ராஜாஜியின் சிரத்தை யாவரும் அறிந்ததே. அரசாங்கத்தில் பல ஜோலிக்காரரான அவர், சமீபத்தில், அதையெல்லாம் சற்று ஒதுக்கிவைத்து, டி. வி. எஸ். கட்டிடம் ஒன்றைத் திறந்து வைக்க விமானத்தில் மதுரை சென்றார்.

—பிளின்ட்!

ஆந்திர சட்டசபை துணைத் தலைவர்

தேர்தலில் 'சென்னை நகரசபை' வேலை

—(:)—

கடைசிவரை நம்பியிருந்து காங்கிரஸ் தோற்றது

கர்னூல், நவ. 24—

ஆந்திர சட்டசபை துணைத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நிறுத்தப்பட்ட அபேட்சகரான நாகபூஷணம் தோல்வியடைந்தார். பிர—சோ. கட்சி அபேட்சகர் பி. சூரியசந்திர ராவ் வெற்றி பெற்றார்.

சூரியசந்திர ராவுக்கு 76 வோட்டுகளும், காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த நாகபூஷணத்திற்கு 59 ஓட்டுகளும் கிடைத்தன.

புதிய துணை சட்டசபைத் தலைவரை பாராட்டி அனைவரும் பேசினர். பாராட்டுதலுக்கு நன்றி கூறுகையில், தெலுங்கிலேயே சூரியசந்திர ராவ் பதிலளித்தார்.

★★★★★★★★★★★

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

135-வது நாள்

★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!

இன்று

86-வது நாள்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—11—1953 புதன்

பாம்பும் தேரையும்!

(2)

பார்ப்பனிய பயங்கரச் சாண்டல் இயந்திரத்தின் விளைவாக, பார்ப்பனர்கள் அனைவரும் தொன்றுதொட்டு எல்லாத் துறைகளிலும், இந்துக்கள் என்று சொல்லுகின்ற மற்றவர்களைத் தாழ்த்தியும் இழிவுபடுத்தியும், மற்றவர்கள் உழைப்பில் எல்லா நலன்களும் பெற்று வந்திருப்பதையும், இன்னும் பெரும்பாலோர் பெற்று வருவதையும், நாட்டு தினசரி நடைமுறை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

தாங்கள், மற்ற எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற மறைக்க முடியாத நினைப்பைப் பெரும்பாலான பார்ப்பனர்கள் கொண்டிருப்பதும், இந்த நினைப்புக்கு அனுகூல வடமொழி வேத ஸ்மிருதி விதிகள் இருந்து வருவதும். இன்று நடைமுறையில் உள்ள 'இந்து சட்டம்' இதை வலியுறுத்தி வருவதும் அனைவருக்கும் தெரிந்துள்ள விஷயமாகும். பார்ப்பனர்களைப் போலவே, மற்ற வகுப்பினர்களுக்குள்ளும் ஜாதி உயர்வு-தாழ்வு பேசப்பட்டபோதிலும், வழக்கத்தில் இருந்து வந்தபோதிலும், அவ்வளவும், பார்ப்பன மக்களின் 'உயர்வுக்கு' முன்னால் மறைந்து ஒழிந்து வருவதும் உண்மையிலும் உண்மையாகும்.

இந்த உயர்வு-தாழ்வு பிரச்னை, பார்ப்பனிய அமைப்பின் உயிர்நாடி என்பதை எவரும் மறந்துவிட முடியாது. இந்தப் பார்ப்பனிய அக்கிரம ஏற்பாடு ஒழிக்கப்பட வேண்டியது. எவ்வளவு அவசியம் என்பதையும், எவ்வளவு முக்கியம் என்பதையும், நாட்டு மக்களின் நலத்தில் அக்கறை உடைய அனைவரும் அறிந்திருக்கிறார்கள் என்றே நம்புகிறோம்.

திருச்சியில் மாநாடு கூட்டிய பார்ப்பன மக்கள், உயர்வு தாழ்வு பேதம் தங்களுக்குக் கிடையாது என்றும், தாங்களும் திராவிடர்கள்தான் என்றும், தங்களுடைய தாய் மொழியும் தமிழ்தான் என்றும், தாங்களும் இந்தியர்கள்தான் என்றும் ஒப்பாரி வைத்திருக்கிறார்கள். தாங்களும் தமிழர், இந்தியர் என்ற நினைப்பு இருக்குமானால், அப்படி நினைத்திருப்பதாக அவர்கள் கூறுவது உண்மையைப்பற்றியதாக இருக்குமானால், அந்த மாநாட்டிற்கு 'ஏன இந்தியர் மாநாடு' என்றோ, 'திராவிடர் மாநாடு' என்றோ, 'தமிழர் மாநாடு' என்றோ பொதுவான பெயர் இடாமல், 'பார்ப்பனர் மாநாடு' என்று பெயரிட்டார்கள் என்ற நியாயமான கேள்வியைக் கேட்கத்தான் வேண்டி இருக்கிறது. மற்ற இந்தியர் நலன்களுக்கும், தங்களுடைய பார்ப்பனர் நலன்களுக்கும் மாறுபாடோ, வேறுபாடோ இல்லாமல் கிடையாது என்ற உயர்ந்த நோக்கம், திருச்சியில் கூடிய பார்ப்பன மக்களுக்கு உண்மையிலேயே இருந்திருக்குமானால், இன்று நாலாயிரம் 'ஜாதி'யாக இருப்பதற்கு பதிலாக 'ஐந்து' ஜாதியாகக் குறைய வேண்டும் என்ற நச்சுத் தன்மைகொண்ட தீர்மானம் போடக் காரணம் என்ன?

'நாம் அனைவரும் இந்தியர் எனத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்' என்றத் தீர்மானமும், இதே முறையில் பேச்சும் அல்லவா அந்த மாநாட்டில் கிளம்பி இருக்க வேண்டும். கிளம்பிற்றா? இல்லையே! ஏன்?

'தாங்களும் திராவிடர்கள் தான்' என்று மார்தட்டிக் கூறிய திருக்கோவிலூர் பார்ப்பனக் குடிப்பிறந்தவரானது, 'பார்ப்பனர் மாநாடு' என்று பெயரிடுவது முறையல்ல, 'திராவிடர் மாநாடு' எனப் பெயரிடுவதே முறை' என்று வாதிட்டிருக்க வேண்டாமா?

'சிலை வணக்கத்தையும், ஆஸ்திகத்தையும் காப்பாற்றக் கிளம்பிய பார்ப்பன மக்கள் மாநாடு' மற்ற 'ஜாதி'யினரான ஆஸ்திக சிகாமணிகளையும், சுயமரியாதைக்காரர்களையும் மாநாட்டில் ஏன் பங்குகொள்ளச் செய்யவில்லை? பார்ப்பன மக்கள் மட்டுமே கூடி, தங்கள் உயர்வுக்கும், ஏனையவர் அடிமை வாழ்வுக்கும் சதித்திட்டம் தீட்டிய ஒரு மாநாட்டை, கடைந்தெடுத்த வகுப்புவாதிகள், வடிகட்டின வகுப்புத் துவேஷிகள் மாநாடு என்று திட்டவட்டமாகக் கூறுவதை விடுத்து, வேறு எவ்வாறு கூறமுடியும்?

'உயர்வு - தாழ்வு கருதாதவர்கள்', 'வகுப்புவாதம் பேசாதவர்கள்' என்றெல்லாம் தங்களைத் தற்புகழ்ச்சி செய்து கொண்ட திருச்சி மாநாட்டுப் பார்ப்பன மக்கள், ஏன், 'மாணவர் உணவு விடுதிகளில் சைவ உணவு தயாரிப்பதற்கு, பார்ப்பன சமையல்காரர்களே தேவை' என்று முடிவு கட்டினார்கள் என்று கேட்கிறோம்.

'மாணவர்களுக்கு சைவ உணவு ஆக்குகிறவர்கள், சைவ உணவையே உட்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும்' என்று தீர்மானித்திருப்பதல்லவோ, இந்த மாநாட்டினரின் 'சமத்துவ' நோக்கையும், போக்கையும் காட்டுவதாக இருக்கும்? இதை விடுத்து, அப்பணிக்குப் பார்ப்பன மக்களே வேண்டும் என்று தீர்மானித்தவர்களை எப்படி 'உயர்வு-தாழ்வு' மனோபாவம் அற்றவர்கள் என்று பிறரால் கொள்ள முடியும்?

'தமிழ்தான் எங்கள் தாய்மொழி' என்றும் அங்கு சல சலப்புக் கிளம்பி இருக்கிறது. மொழித் துறையில் அவர்கள் கூறியது உண்மையாக இருக்குமானால், 'வடமொழி—சமஸ்கிருதம்' பற்றி அவர்கள் மாரடித்துக் கொள்ளக் காரணம் என்ன?

இவ்வளவையும் நோக்கும்போது, இழந்துவிட்ட ஆதிக்கத்தை, சரிந்து வரும் சனாதனத்தை, தீவிரமாகக் கரைந்து வரும் வருணாசிரமத்தை, மீண்டும் செப்பனிட்டுச் சிம்மாசனத்தில் ஏற்றவே, தந்திரசாலிகளான சில பார்ப்பன மக்கள் திருச்சியில் கூடி, முகாரி பாடி இருக்கிறார்கள், என்ற முடிவிற்குத்தான் நாம் வரக்கூடிய வேண்டியதாக இருக்கிறது.

'கத்தியைத் தூக்கிக் கொள்ளுங்கள்' என்று திருச்சி மாநாட்டில் கட்டளை பிறந்திருக்கிறது. இதுபற்றி 'இந்து' இதழ் என்ன நினைக்கிறதோ, என்ன எழுதப் போகிறதோ நாம் அறியோம்! உப்புக்கண்டம் பறிகொடுத்தப் பார்ப்பனத்தி போல 'இந்து' வாயடைத்துக் கிடந்தாலும் நாம் ஆச்சரியப் படமாட்டோம்.

இந்தச் சனாதனத்தைத் தனது பலம் கொண்ட மட்டும் சாடி இருக்கிறார் யூனியன் அமைச்சர் ஜகஜீவன்ராம். அவர் ஒரு காங்கிரஸ் கட்சியினராக இருந்தும், அவர் ஒரு 'தாழ்த்தப்பட்டோர்' என்று சொல்லப்படும் குடிப்பிறந்தவராக இருப்பதால், அவருக்குத் தெரிந்தது சனாதனத்தினால் மனித சமுதாயம் பெற்றுள்ள கேடுகள் பாதரட்சையை அணிந்திருப்பவர்களுக்கல்லவா தெரியும். அது எங்கே கடிக்கிறது என்பதும், அதன் வலியின் தன்மை எப்படி இருக்கிறது என்பதும்?

பல்லக்குத் தூக்குகிறவனுக்கல்லவா, பல்லக்கு சுமையின் கனமும், அந்தச் சுமையின் விளைவாகத் தனது தோள்களில் உண்டாகியுள்ள புண்ணின் வலியும் தெரியும்? பல்லக்கிலே உட்கார்ந்து கொண்டிருக்கிற மாமிசப் பிண்டத்திற்கு, ஏறிச் செல்வதில் உள்ள சுகம் மட்டுந்தானே தெரியும்? அந்தப் பரோபகாரி, பல்லக்குச் சவாரியின் உயர்வு பற்றிக் கூறுவதிலே என்ன ஆச்சரியம் இருக்கிறது? அவருடைய அனுபவந்தானே அவருக்குத் தெரியும்!

திருச்சி, மாநாடு, இந்தப் பல்லக்குச் சவாரி சுகவாசியின் மாநாடேயாகும்!

சிங்கப்பூருக்குக் கப்பல் தபால்

சென்னை, நவ. 25—'எஸ். எஸ். ஜலகோபால்' டிசம்பர் 1-ந் தேதியன்று சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்படுகிறது. நகரக் கிளை தபாலாபீசுகளில் நவம்பர் 30-ந் தேதி காலை 10.00 மணிக்கு முன்பும், ஜெனரல் போஸ்டாபீசில் அன்று மாலை 3.00 மணிக்கு முன்பும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் சேரும்.

மைசூரில் சர்க்கரை — ஆலைக்கு அனுமதி

தென்னிந்தியாவிற்குச் சலுகை தரப்படுமாம்!

நியூடெல்லி, நவ. 24—மைசூர் மாநிலத்தில் புதிய சர்க்கரை ஆலை திறப்பது பற்றி கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு யூனியன் உணவு மந்திரி ரபி அகமத் கித்வாய் பதில் கூறும் பொழுது, ஷிமோகாவில் ஒரு சர்க்கரை ஆலையைத் துவங்குவதற்கு அனுமதி கோரப்பட்டதாகவும். அனுமதி கோரியவர் ஏற்கனவே கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து அதற்கான இயந்திரங்களை வாங்கி விட்டதாகவும் கூறப்பட்டிருந்ததால், புதிய ஆலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருப்பதாகவும், கூறினர்.

மேலும் அவர் பேசும்பொழுது, இந்தியாவின் தேவைக்கேற்ற அளவு சர்க்கரை உற்பத்திச் செய்வதற்கு மேலும் பல ஆலைகள் துவங்குவதை சர்க்கார் அனுமதிக்கத் தயாராக இருப்பதாகவும், இத்துறையில் தென்னிந்தியாவிற்கு முதற் சலுகை தர சர்க்கார் முடிவிற்கு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

காவலில் உள்ள கயானா தலைவர்களின் உண்ணா நோன்பு!

கவர்னர்குழுவிடம் மறுப்புகூறுவதை விரும்பவில்லை

ஜார்ஜ்டவுன், நவ. 24—விலக்கப்பட்ட பிரிட்டிஷ் கயானா மந்திரிகளில் ஒருவரான டாக்டர் சிட்னி கிங் என்பவரையும், பி. பி. கட்சியின் முக்கிய தர்களான வேறு மூன்று தலைவர்களையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காவலில் வைத்திருக்கிறது.

தங்களைக் காவலில் வைத்திருப்பதற்கு எதிராகத் தாங்கள் கூற வேண்டிய நியாயங்களைக் கேட்பதற்கு கவர்னரின் ஆலோசனைக் குழு முன் வந்தது.

டாக்டர் சிட்னி கிங், கவர்னர் குழுவிடம் முறையிடுவதைப் புறக்கணிப்பார் என்றும், மற்ற மூவர்களும் காவலில் வைத்திருப்பதற்கான காரணங்கள் கூறப்பட்ட பின்னர், தங்களுடைய போக்கை முடிவு கட்டுவார்கள் என்றும் நம்பப் படுகிறது.

இவர்கள் அனைவரும் கடந்த ஐந்து தினங்களாக உண்ணா நோன்பை மேற்கொண்டுள்ளனர். வெறும் தண்ணீரை மட்டுந்தான் அருந்துகிறார்களாம்.

பிணத்துக்கு மகுடம் சூட்ட பிரகாசாவின் துடிப்பு

சமஸ்கிருதம் பொது மொழியாகலாம் என்கிறார்

இலக்ஷ்மணபுரி, நவ. 23—"ஆங்கிலத்தின் முக்கியத்துவத்திற்குப் பதிலாக, இந்தியை விட சமஸ்கிருத மொழியே நாட்டு மொழியாக்கப்பட்டிருக்கலாம்," என்ற கருத்தை சென்னை கவர்னர் பிரகாசா இங்கு தெரிவித்தார்.

அரசாங்க மாளிகையில் சமஸ்கிருத விசயப் பரீட்ஷைத் தின் மாநாட்டை அவர் துவக்கி வைத்தார்.

"ஒரு பகுதியின் மொழியையே நாட்டு மொழியாக்க வேண்டுமென்றால், மற்றபகுதி மொழிகள் பேசுபவருக்கு இதனால் பொறாமையும் வெறுப்பும் உண்டாகும்.

இந்திய மொழிக்கு அடிப்படையாக உள்ள ஒரு மொழியையோ, அல்லது வேறு நாட்டு மொழியையோ நாட்டு மொழியாக்கிவிட்டால் வெறுப்புணர்ச்சியை நீக்கிவிடலாம்.

ஆங்கிலத்திற்கு எதிர்ப்பு கிடையாது; ஆனாலும் இனி அது நாட்டு மொழியாக இருக்க முடியாது. அதற்குப் பதில இனி சமஸ்கிருதமே சரியானது," என்றார்.

இம்மாநாட்டிற்கு உ. பி. கவர்னர் கே. எம். முன்ஷி தலைமை தாங்கினர்.

---

83 காங்கிரஸ்காரர்களுக்குக் 'கல்தா!'

உத்திரப் பிரதேச காங்கிரஸ் குழுவின் முடிவு

லக்னோ, நவ. 24—அண்மையில் நடைபெற்ற நகராட்சி மன்றத் தேர்தல்களில் அதிகாரம் பெற்ற காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களை எதிர்த்து நின்ற அல்லது வேலை செய்த 83 காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களை கட்சியில் இருந்து, உத்திரப் பிரதேச காங்கிரஸ் குழு வெளியேற்றி விட்டது. இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு காங்கிரசில் அவர்கள் எந்தப் பொறுப்பான பதவிகளிலும் இருக்கக்கூடாது என்று தடை விதித்திருக்கிறது.

கருணாநிதி நிகழ்ச்சிகள்

★

நவ.	28:	காஞ்சீபுரம்
	29:	சென்னை
டிசம்.	2:	வாணியம்பாடி
	5:	கோவை
	6:	தஞ்சை
	13:	மதுரை

நாவலா......

★

தோழர் மு. கருணாநிதி அவர்கள் 21—11—53 சனியன்று, திருச்சியில் நடைபெற்றபாராட்டுக் கூட்டத்தில் ஆற்றிய முழு சொற்பொழிவு நாளை 26—11—53-ல், "நம் நாடு" இதழில், வெளிவரும்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன்(23—11—53)தொடர்ச்சி ரூ.	4212—1-11
பாபநாசம் தி. மு. கழகம்	5—0—0
திருமானூர் டி. எம். சுப்ரமணியம்	5—0—0
,, எம். சின்னையன்	1—0—0
,, எம். சவுந்தரவி	1—0—0
,, எம். சண்முகசுந்தரன்	1—0—0
,, தேமொழி	1—0—0
சிங்கப்பூர்-சிலேத்தார் தோழர்கள்:-	
தே. வேலாயுதம்	3—0—0
ஏ. பழனிவேலு	3—0—0
சின்னையா	1—8—0
ஏ. என். மகமத் நூர்ஜஹான்	1—8—0
ஏ. ஆல்பர்ட்	1—8—0
ஜி. விஜயன்	1—8—0
வே. ராஜப்பன்	1—8—0
மு. தஞ்சம்	1—8—0
ஐ. செல்லப்பன்	1—8—0
பி. கார்த்தான்	2—4—0
எஸ். கிருஷ்ணன்	1—8—0
கா. கலிதீர்த்தன்	7—8—0
மு. ரங்கசாமி	3—0—0
ஆர். கிருஷ்ணன்	1—8—0
எம். முனுசாமி	1—8—0
என். குப்புசாமி	3—0—0
எம். கணபதி	3—0—0
வி. ராஜேஸ்வரி	2—4—0
ஏ. சி. ஆசைத்தம்பி	2—4—0
கா. வீரப்பன்	1—8—0
த. க. வைத்தியலிங்கம்	4—8—0
நாகராஜன்	3—0—0
என். செல்லப்பன்	1—8—0
பி. சங்கர்	1—8—0
எம். ஏ. பக்கர்	1—8—0
ரஹிமான்	4—8—0
ப. மணி	3—0—0
கேசவன்	3—0—0
நாராயணன்	1—8—0
சுப்ரமணியம், பழனிஆனந்தன், எம். சாமிநாதன், வி. அஞ்சப்பன் ராஜேந்திரன், வ. ராசு, பிச்சை, பிச்சை ஆகியோர்	6—0—0
தூத்துக்குடி, டேவிஸ்புரம் ரோட், பகுத்தறிவு நிலையம் சு. உ. வெற்றிவேல் மூலம்	25—0—0
சேரன்மகாதேவி தி மு. கழகம் என். பாண்டியன் மூலம்	10—0—0
சென்னை 44-வது வட்டம் கே. துயமணி	1—0—0
அம்மையப்பன் தி. மு. கழகம் வி. சோமசுந்தரம்	5—0—0
சேலம் ஆர். கிருஷ்ணசாமி	1—0—0
தளவாய்புரம் தி மு. கழகம் அ. வன்னியப்பெருமாள்	2—0—0
திருப்பூர் என். ராஜகோபாலன்	2—0—0
திருவொற்றியூர் அன்பர் ஒருவர்	2—4—0
தூத்துக்குடி 25-வது வார்டு தோழர்கள் பி மாணிக்கம் மூலம்	3—8—0
சென்னை 33-வது வட்டம் அண்ணா இளஞ்சிறுவர்கள் க. பா. சு. மணி க. கோ. நாதன்	2—6—6
சக்கரமல்லூர் தி மு. கழகத் தோழர்கள் :—	
வி ஏ. நடராசன்	10—0—0
கே. பார்த்தசாரதி	3—0—0
ராதாகிருஷ்ணன்	1—0—0
பி ஜி. வெங்கடேசன், ராமலிங்கம் ஆகியோர்	1—8—0
திருவாரூர் ப சிங்காரம்	1—0—0
சென்னை—மயிலை த. கிருஷ்ணன்	1—0—0
சென்னை—மயிலை ரமணி	1—0—0
பொள்ளாச்சி ஏ. வாசன்	2—0—0
அகமதாபாத் எஸ். மகாலிங்கம்	2—0—0
செருவங்கூர் கே. வேலாயுதம்	5—0—0
துறையூர் தி மு. கழகம்	5—0—0
துறையூர் ஜி என். சுப்ரமணியம்	8—0—0
திருச்சி—சிந்தாமணி தி. மு. கழகக் கிளை	10—2—0
மதுராந்தகம் தி. மு. கழகப் பொதுக் கூட்ட உண்டி வசூல்	15—0—0
மருதூர்—வடக்கு ப. முருகு	1—0—0
,, மு. வைரப்பன்	1—0—0
,, குமாரசாமி, வைரப்பன், சீனிவாசன், ராமசாமி, முருகப்பன், மாரியப்பன், பொன்னுசாமி, சுப்ரமணியம் ஆகியோர்	4—0—0
மதுரை பெ. அய்யாச்சாமி	1—0—0
,, அ. தங்கையா	1—0—0
,, அ. பாதமுத்து	1—0—0
,, கொ. தருமராசன், பழனிசாமி	1—8—0
சிவகாசி எஸ். ஆர். அறிவழகன்	1—0—0
சென்னை தென்பகுதி ரயில்வே பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் தொழிலாளர்கள்	41—8—0
ஆகமொத்தம் ரூ.	4469—10—5

இந்தியாவுக்குப் பர்மா தரவேண்டிய கடன்

புதுடில்லி, நவ 25—

பர்மா இந்தியாவுக்குத் தரவேண்டிய கடன் தொகைகளைத் திருப்பித் தருவது பற்றிய பிரச்னைகள் சம்பந்தமாக பர்மா சர்க்காருடன் கலந்தாலோசிப்பதற்காக, நிதி மந்திரி காரியாலய கூட்டுக் காரியதரிசி இன்று, ரங்கூன் செல்லுகிறார்.

பர்மா, இந்தியாவுக்குத் தரவேண்டிய கடன் தொகைகள், முக்கியமாக, 1937-ல் இந்தியாவிலிருந்து பர்மா பிரிந்ததினால் ஏற்பட்டவையாகும்; தற்போதுள்ள கடன் தொகைகள் மொத்தம் 71 கோடி ரூபாயாகும்; அதில் 65 கோடி ரூபாய், வட்டியுள்பட, பிரிவினைக் கடனுக்காகவும், 6 கோடி ரூபாய் மத்திய பென்ஷன் தொகுதிக்கு பர்மாவின் பங்குக்காகவும் கொடுக்கப்படவேண்டிய தொகைகளாகும்.

பிரிவினைக் கடன் சம தவணைகளாக ஆறு மாதத்துக்கு ஒரு தடவை கொடுக்கப்பட வேண்டும். பர்மா சர்க்கார் கடன் தொகைகளுக்காகவும், பென்ஷன் பொறுப்புகளுக்காகவும் இந்தியாவுக்கு, 1942 மார்ச் 31ந் தேதி வரை, தவணைத் தொகைகளைத் தவறாமல் செலுத்தி வந்தனர். அதன் பிறகு யுத்தம் காரணமாகவும், அதன் விளைவுகளின் காரணமாக ஏற்பட்ட சிரமங்களின் காரணமாகவும் தவணைத் தொகைகள் கொடுக்கப்படாமல் அப்படியே நின்று போயிருந்தன.

சிட்னி, நவ. 25—

ஆஸ்திரேலியாவில் 1901 முதல் பறந்துகொண்டிருக்கும்நீலநிறக் கொடியை தேசிய கொடியாகப் பிரகடனம் செய்ய சட்டம் கொண்டுவரப்படும்.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு வசூல் செய்ய, தி. மு. கழகத் தலைமை நிலையத்திலிருந்து ரசீது புத்தகங்கள் பெற்றுக் கொண்ட தோழர்கள், கருணைகூர்ந்து, 29—11—53-க்குள் இங்குக் கிடைக்கும்படி ரசீதுப் புத்தகங்களையும், வசூல் தொகையையும் அனுப்பிவைக்கும்படி செய்ய வேண்டுகிறோம்.

ரசீதுப் புத்தகங்கள் பெறாமல், வசூல் செய்து தொகை வைத்திருக்கும் தோழர்களும் தொகையையும், வசூல் விபரங்களையும் 29—11—53-க்குள் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களும், மற்றத் தோழர்களும் 30—11—53-ல் விடுதலையடைகின்றார்கள்; அவர்களிடம் தூத்துக்குடி நிதியையும், வரவு—செலவு கணக்குகளையும் கொடுக்கும்படி செய்ய எல்லாத் தோழர்களையும் ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். தூத்துக்குடி நிதிக்கு வேண்டும் தொகை ரூ. 20,000. ஆனால், இதுவரை நம்வசம் வந்திருக்கும் தொகை ரூ 4469—10—5.

நம் தோழர்கள் தங்கள் கடமை உணர்ந்து மிகவும் ஊக்கத்துடன் நிறைவேற்றினால்தான் நாம் விரும்பும் தொகையைக் கூடிய விரைவில் சேர்த்துக் கொடுக்க முடியும். இம்முயற்சியில், எல்லாத் தோழர்களையும், தி. மு. கிளைக் கழக உறுப்பினர்களையும் பூரணமாக ஒத்துழைத்து ஆதரவளிக்கும்படி வேண்டுகின்றோம்.

'அறிவகம்' சென்னை 25-11-53 } ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., பொறுப்பாளர், தி. மு. கழகத் தலைமை நிலையம்.

உணவு உற்பத்திக்கு ராணுவத்தின் உழைப்பு

பெர்லின், நவ. 25—

ரஷ்யாவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக கூட்டுப் பண்ணைகளில் வேலை செய்யும்படி இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை 70,000 பேர் கூட்டுப் பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். பண்ணைகளைச் சீர்திருத்த 7 கோடி ரூபிள்களை (ரஷ்ய நாணயம்) செலவு செய்ய சர்க்கார் அங்கீகரித்துள்ளது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்

மேற்கொண்டு இயந்திரங்களுக்கு ஆர்டர்

சென்னை, நவ. 24—

தென் ஆற்காடு மாவட்ட நெய்வேலி நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் தீவிரமாக வேலை செய்வதின் பொருட்டு சீக்கிரமாக மேற்கொண்டும் இயந்திர தளவாடங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்படுமெனத் தெரிகிறது.

சிறுவனை மேஜை அறைக்குள் தள்ளி மூடிய இரு ஆசிரியர்கள்!

மூன்று மாதம் வேலையில் இருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்

பாலகாட், நவ. 25—

ஆலத்தூரில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியின் ஆசிரியர்களான சந்திரசேகரன் நாயர், மாதவன் நாயர் ஆகிய இருவரையும், மாணவச் சிறுவனைக் கொடுமை செய்த குற்றத்திற்காக மூன்று திங்கள் வேலையிலிருந்து நீக்கி வைத்துள்ளனர்.

ஏதோ சேட்டை செய்தது என்பதற்காக ஐந்தரை ஆண்டும் நிரம்பப் பெறாத சிறு குழந்தையை ஆசிரியர் மாதவன் நாயர் மேஜை அறையில் தள்ளி மூடிவைத்ததாகவும், குழந்தை பீதியடைந்து வெளிவர முயன்றதாகவும், அப்பொழுது ஆணி ஒன்று குழந்தையின் தலையில் குத்தி காயப்படுத்தியதாகவும் புகார் சொல்லப்படுகிறது.

குழந்தை, இந்தச் சம்பவத்தைப் பெற்றோர்களிடம் கூறவே, அவர்கள் தொடர்புடைய கல்வித் துறை அதிகாரி அலுவலரிடம் புகார் செய்யவே, உண்மை அறிய விசாரணை செய்யக் கட்டளையிட்டு விட்டு, அதுவரை மூன்று மாதங்களுக்கு இரு ஆரம்ப ஆசிரியர்களும் வேலை செய்யக் கூடாது என, நீக்கி வைக்கவும் ஆணை பிறப்பித்திருக்கிறார்.

'வாளேந்துக!'-பார்ப்பனர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வது சரியல்ல"

"முற்காலத்தில் இருந்தபடி நான்கு ஜாதிப் பிரிவினையை ஏற்படுத்த வேண்டும். மற்ற பல்வேறு பிரிவுகளை நீக்க வேண்டும்."

"தேசிய ஒற்றுமைக்கு விரோதமாகவும், சமூகத்திற்கு விரோதமாகவும் ஒரு குறிப்பிட்ட ஜாதியினருடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டால் அதுதான் வகுப்புவாதம்," என்றார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

"சட்டரீதியாக வகுப்புவாத உத்தரவு ஒழிக்கப்பட்டாலும் பார்ப்பன மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடம் கிடைப்பது கடினமாகத்தான் இருக்கிறது. பார்ப்பன மாணவர்கள் எல்லோரும் அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆசைப்படக்கூடாது"

"நமது இந்த தர்ம கலாச்சார அடிப்படையில், நவீன காலத்திற்கேற்றாற்போல புதிதாக அமைத்த ஒரு கல்வித் திட்டம் தேவை" என்றார்.

மாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் எம். ராமச்சந்திர அய்யர் பேசுகையில் கூறியதாவது :—

"பெரியார் ஈ. வெ. ரா. தமது சகாக்களை தற்காப்புக்காக கத்தி வைத்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறார் :

அதுபோல, பார்ப்பனர்களும் தற்காப்புக்காக ஆயுதம் வைத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

பார்ப்பனர்கள் கையாள வேண்டிய திட்டங்கள் :—

(1) கலிகாலத்தில் சாத்தியமானவரை சாஸ்திர பூர்வமாக பிராமணிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

(2) எளிமையாகவும், சிக்கனமாகவும் இருக்கவேண்டும்; எளிமையான வாழ்க்கை, உன்னத லட்சியம் அவசியம்.

(3) சாத்வீக உணவையே சாப்பிட வேண்டும்; சைவ உணவையே உட்கொள்ள வேண்டும்

(4) சந்தியாவந்தனம், காயத்திரி ஜபம், பூஜை ஆகியவைகளைச் செய்யவேண்டும்.

(5) எல்லோரிடமும் அன்பாக இருக்கவேண்டும்.

(6) பார்ப்பனப் பெண்கள் ஆடம்பரத்தைக் கைவிட வேண்டும்; அதிகமாக நகைகள் போட்டுக் கொள்ளக்கூடாது.

(7) சக்திக்கு மீறிய படிப்பு வேண்டாம். வாலிபர்கள் எல்லோரும் சமஸ்கிருதம் படிக்க வேண்டும்.

(8) சர்க்கார் வேலைக்காக அலையக்கூடாது. வாத்தியார்களாகவும், டாக்டர்களாகவும், எஞ்சினியர்களாகவும், வக்கீல்களாகவும் வேலை தேடட்டும்.

(9) இளம் வயதில் திருமணம் நடைபெற உற்சாகமளிக்க வேண்டும். ஏழைகளுக்கு சிறு வயதில் மணமாக நிதி சேர்ப்போம்.

(10) குறிப்பாக பார்ப்பன சமூகத்தைத் தாக்கி எழுதும் பத்திரிகைகள்மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்க மாநாடு வற்புறுத்துகிறது.

(11) மாணவர்களது மதத்திற்கு அவமதிப்பு ஏற்படாமலிருக்கும் பொருட்டு ஹாஸ்டல்களில் சைவ உணவு பகுதிகளுக்கு பார்ப்பன சமயற்காரர்களை நியமிக்க வேண்டும்.

(12) பள்ளிக்கூடங்களில் சமஸ்கிருத போதனைக்கு வசதி அளிப்பதுடன் சமஸ்கிருத அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டபணத்தை வேறு இனங்களுக்கு செலவிடக் கூடாது எனவும் மாநாடு வற்புறுத்துகிறது.

மக்கள் சபையில் மீண்டும் கைத்தறி பிரச்சினை

புதுடெல்லி, நவ. 24—

மக்கள் சபையில் கைத்தறி—மில் விவாதம் மீண்டும் கிளம்பியது. கோட்டாவுக்கு மேல் அதிக வேட்டி உற்பத்தி செய்யும் மில்களுக்கு உபரி வரி விதிப்பதற்கான மசோதாமீது விவாதம் நடந்தபோது உறுப்பினர்கள்; வேட்டி, புடவை, உற்பத்தியை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென வற்புறுத்தினர்.

ஏற்கனவே அவசரச் சட்டமாக பிறப்பிக்கப்பட்ட உபரிவரி உத்தரவுதான் இப்போது மசோதா ரூபத்தில் வந்திருக்கிறது. விவாதத்தின் போது எச். ஜி. ஹேட்டா பேசுகையில் உபரிவரி விகிதங்கள் மிக அதிகம் என்று கூறினார்.

மேற்குவங்கத்தில் மில்வேட்டி குறைக்கப்பட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமென குதாபக்ஷ் கூறினார்.

ஆந்திராவுக்குப் புதிய உயர்நீதி மன்றம்

கவர்னர் திருவேதி அறிவிப்பு

கர்னூல், நவ. 24—

ஆந்திர அசெம்பிளியில் ஆந்திர கவர்னர் திருவேதி தனது முதற் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதுபோது, ஆந்திராவுக்கு தனி உயர்நீதி மன்றம் அமைக்க தனது சர்க்கார் விரும்புவதாகவும், அடுத்த ஆண்டு கோடை கால அசெம்பிளிக் கூட்டத்திற்குப் பிறகு ஹைகோர்ட் அமைக்கப்படுமென்றும் கவர்னர் அறிவித்தார்.

திருச்சி தி. மு. கழக துவக்க விழா

திருச்சி, நவ. 24—

திருச்சி நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துவக்க விழா 22-ம் தேதி ஞாயிறு காலை 9-மணிக்கு திருச்சி தேவர் மன்றத்தில் தோழர் ஆற்றலழகன் தலைமையில் துவக்கிய மாணவர் தி. மு. கழகச் செயலாளர் எழிலன் அவர்கள் கழகத்தின் நோக்கம் பற்றி பேசியபின், திராவிட நாடு ஏடின் ஆசிரியர் தோழர் இராம. அரங்கண்ணல், மாணவர் தி. மு. கழகத்தைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினர். தொடர்ந்து கண்ணதாசன், தி. மு. கழகப் பொருளாளர் தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ., மு. கருணாநிதி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் கல்லக்குடி வழக்கு நிதிக்காக உண்டியல் மூலம் ரூ 74 வசூலாகியது. தொகையை பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. செயலாளர் நன்றி கூற கூட்டம் பகல் 1-மணிக்கு முடிவுற்றது.

எண்ணூர் தி. மு. கழகம்

1—11—53ல், துவக்கப்பட்ட இக்கழகத்திற்கு தோழர்கள் வி. சேது செயலாளராகவும், எம். குப்புசாமி துணைச் செயலாளராகவும், ஆர். முத்துக்கிருஷ்ணன் பொருளாளராகவும், ஆர். சண்முகம் மன்றப் பிரதிநிதியாகவும், மற்றும் வி. சுப்பிரமணியம், கோவிந்தசாமி, கே. ரங்கன், வேலு, ஆர். ராமச்சந்திரன், பாலன், கிருஷ்ணன், என். கோவிந்தன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெல்லை தி.மு.க. கழகம்

22 11-53ல், தோழர் ஞானக்கண் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் சாமித்துரை செயலாளராகவும், ஞானக்கண் துணைச் செயலாளராகவும், அலிசேக மல்லு பொருளாளராகவும், குற்றாலம், சீனிவாசகன், நம்பி, இரத்தினம், இராகவன், சாலை. இராமசாமி, முதலியார், செல்லையா, நீலகண்டன் ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆலந்தூர் தி. மு. கழக ஆண்டு விழா

ஆலந்தூர், நவ 22—

நேற்று மாலை 6 மணிக்கு, ஆலந்தூர் தி. மு. கழகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மு. சுந்தரவேலர் தலைமையில் தோழர்கள்: இரா. கோதண்டராமன், முனைவர் ஆர். எஸ். பாண்டியன், வி. என். கோவிந்தராசன், நடிகமணி நாராயணசாமி ஆகியோர் முக்கொள்கையை விளக்கியும், அதன் சமீபகால போராட்டங்களைப் பற்றியும், ஆச்சாரியாரின் குலக்கல்வி முறையைக் கண்டித்தும் விளக்கமாகப் பேசினர்.

'குலக்கல்வி சதித் திட்டத்தை' கண்டிக்கவும், சர்க்கார் ஆணைப் படிப்பை போராடவும் ஒரு பிரசங்க லெம்பிளிடத் தீர்மானங்கள் நிறைவேறின.

ஒரே மாதிரியான பிரச்னை!

கொழும்பு, நவ 24—

"இந்திய இலங்கை இவ்விரு நாடுகளுக்கும் முன்புள்ள பிரச்னைகள் ஒரே மாதிரியானவை. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவுமே இருநாடுகளும் பாடுபடுகின்றன," என்று இலங்கை நிதி மந்திரி கூறியுள்ளார்.

தோழியர் அருண்மொழி அவர்கள் உடல்நலிவு

சென்னை, நவ. 25—

"தோழியர் அருண்மொழி அம்மையார், பி. ஓ. எல். அவர்கள், உடல்நலிவு காரணமாக இங்கு மருத்துவர் சிகிச்சையிலிருக்கிறார்கள். மருத்துவர், இன்னும் 15 நாட்களுக்கு வெளியூர் பிரயாணம் சொற்பொழிவு நிகழ்ச்சிகட்குச் செல்லாமல் ஓய்வாகயிருக்கும்படி கூறியுள்ளார். எனவே, நாங்களிருவரும் ஒப்புக்கொண்ட வெளியூர் அழைப்புகட்கு 15 நாட்கள் வரை வரமுடியாமலிருக்கிறோம்." என்று தோழியர் பூங்கோதை அம்மையார் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மதுரை வழக்கு நிதி நாடகம்

மதுரை, நவ. 20—

15—11—'53-ல், நடந்த மதுரை நகர் தி. மு. கழக வழக்குக்காக தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களைக் கொண்டு நடத்திய 'இன்பக் கனவு' நாடக வரவு செலவு விபரம் :—

டிக்கட் விற்பனை மூலம் வரவு	4002-8-0
நாடக ஏற்பாடுகளுக்காக, நாடக மன்றத்தார் போக்குவரத்து செலவு உள்பட மொத்த செலவு	2262-1-0
மீதி இருப்பு ரூ	1740-7-0
மதுரைக்கு நேரு வருகையின் போது கருப்புக் கொடி காட்டியதில் ஏற்பட்ட செலவு பகுதி	94-14-0
நகர் கழக வாடகைக்காக கொடுத்தது	355-0-0
	449-14-0
மீதி இருப்பு, செயலாளர் எம். முத்து வசம் வழக்குச் செலவுக்காகக் கொடுத்தது	1290-9-0

காஞ்சிபுரம் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

22—11—53ல், நகர தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. கல்லக்குடி சதிவழக்கு நிதிக்காக நன்கொடை டிக்கட்டுகள் அச்சிட்டு ஒவ்வொரு கிளைக் கழகங்களுக்கும் கொடுத்து வசூலிக்க ஏற்பாடு செய்வதென்றும், தோழர்கள் அண்ணாதுரை, மதியழகன், நெடுஞ்செழியன், என். வி. நடராசன், சம்பத், கருணாநிதி ஆகியோருக்கு 1—12—53ல், காஞ்சியில் வரவேற்பு அளிப்பதெனவும், அதற்கான செலவுக்கு பணம் வசூல் செய்ய தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, டி. சபாபதி, கே. டி. எஸ். மணி, பி. சுப்பராயன், இ. எத்திராசு, இரா. வெங்கடேசன் ஆகியோர் கொண்ட குழு ஒன்றும் நியமிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இரா. வெங்கடேசன் நகர செயலாளர், மாவட்டக் கமிட்டி பிரதிநிதியாக, ஆர். கே. மூர்த்திக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கலர் முட்டைகள்!

நியூயார்க், நவ. 25—

சாயம் ஏற்றிய உணவுப் பொருள்களை, கோழிகளுக்கு ஆகாரமாக அளிப்பதன் மூலம் பச்சை, சிவப்பு, ஊதா முதலிய கலர்களில் முட்டையிடச் செய்ய முடியும் என்பதை அமெரிக்கர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கழகக் கூட்டங்கள்

★

பண்ணுருட்டி

27—11—53 வெள்ளி மாலை

பேசுபவர் :

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

★

ஜமீன் ஊத்துக்குளி

29—11—53 ஞாயிறு மாலை

பேசுவோர் :

அ. ச. இளங்கோ

திருப்பூர்—அரசன்

★

வேலூர் தோட்டப்பாளையம்

29—11—53 ஞாயிறு மாலை

பேசுவோர் :

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கருத்தோவியன்

பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக உறுப்பினர்களுக்கு

'வடசென்னை கே. என். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தின் புதிய செயற் குழுவைத் தேர்ந்தெடுக்க, படிப்பக அங்கத்தினர்கள் கூட்டம். 29-11-53 ஞாயிறு காலை 10 மணிக்கு படிப்பகத்தில் கூடும். அங்கத்தினர் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்," என்று, ஆர். பி. கனி அறிவிக்கிறார்.

தியாகதுருகம் வட்டத்தில் தி. மு. கழகங்கள் திறப்பு விழா

தியாகதுருகம் வட்டத்தில், தி. மு. கழகக் கிளைகள் துவக்க விழாவும், பொதுக் கூட்டங்களும் நவ. 26, 27, 28 ஆகிய தேதிகளில், முறையே திருப்பயர், புக்குளம், தியாகதுருகம் ஆகிய ஊர்களில் நடைபெறும். தோழர்கள் வி. சண்முகநாதன், பி. ஏ., ம. பொன்னம்பலம் ஆகியோர் சொற்பொழியாற்றுவர்.

'ஆசைத்தம்பி' பிறப்பு

பெரியகுளம் நகர தி. மு. கழக உறுப்பினர் தோழர் எம். கே. ஆறுமுகம் அவர்களின் சகோதரி சின்னம்மாளுக்கு 29—10—53 வியாழக்கிழமை காலை 11-50 மணிக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு 'ஆசைத்தம்பி' எனப் பெயர் வைக்கப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ஒரு ரூபாய் அன்பளிப்பாகத் தரப்பட்டது—கிடைக்கப் பெற்றோம்—நன்றி .(ஆ.-ர்.)

திருமணம்

28—8—53 வெள்ளியன்று காலை 9 மணிக்கு சிக்களாந்தபுரத்தில், தோழர் எ. பி. சுப்பையாவுக்கும், தோழியர் சிவபாக்கியத்திற்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் எஸ். கே. மாணிக்கம், டி. பி. அழகுமுத்து ஆகியோர் பேசினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூபாய் 5 அன்பளிக்கப்பட்டது, — வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்

பம்பாய், நவ. 25—

சுகாதாரக் கல்வி போதனைக்கு சினிமா முதலிய சாதனங்களைப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி மத்திய, மாகாண சர்க்கார்களுக்கு சர்வதேச சுகாதார நிலைய ஆலோசனை கூறும் என்று தெரிகிறது.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கை

சேலம் ஜில்லா இராசிபுரத்தில், 10—11—53 காலை $7\frac{1}{2}$-மணிக்கு ஸ்தல ஸ்தாபன மந்திரி ராஜாராம் நாயுடு அவர்களை சேலம் ஜில்லா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஜில்லா மாநாட்டு வரவேற்புக் கமிட்டி மெம்பர் கே. செல்லப்பன் சந்தித்து கீழ்க்கண்ட மனு சமர்ப்பித்தார். அந்த மனுவில் குறிப்பிட்டிருந்ததாவது :—

"இன்றுள்ள நெருக்கடியான நிலைமையில், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கை மோசமான நிலையில் உள்ளது. ஒன்றுக்கு நான்கு மடங்காக விலைவாசிகள் ஏறி விற்கும் இந்த நெருக்கடியான சமயத்தில், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் ரூ. 30-ம், அலவன்ஸ் ரூ 19-ம் பெறுகின்றனர். இதிலிருந்தே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வாழ்வு எத்தகையது என்பது தெரியும்.

இதன்றி, மோசமான வாழ்க்கையில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இருப்பதன் காரணமாக சமூகத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை யாரும் மதிப்பதே கிடையாது. இதற்கு உதாரணமாக, "கெடுக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி; அதற்கும் இளைத்தவன் பள்ளிக்கூட வாத்தியார்", என்ற பழமொழி தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது என்பதே இதற்குப் போதிய சான்றாகும். இதனைக் கொண்டன்றோ, "ஆசிரியர்களின் சம்பளத்தைத் தணிசமாக உயர்த்தினாலன்றி, சமூகத்தில் ஆசிரியனது அந்தஸ்து உயராது," என பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் கல்வி ஆலோசனைக் கமிட்டி குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

எனவே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தைத் தணிசமாக உயர்த்த, கீழ்க்கண்ட கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யப்பட வேண்டுகிறோம் :—

(1) மத்திய சம்பளக் கமிஷன் சிபாரிசின் அடிப்படையில் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்.

(2) விலைவாசிக்கேற்ற பஞ்சப்படி தரப்பட வேண்டும்.

(3) உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் வேலை செய்யும் செகண்டரி ஆசிரியர்களுக்கு சம்பள விகிதத்தில் வேறுபாடு கூடாது.

(4) புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்துள்ள எல்லா இடங்களிலும் வேலை நேரமும், வேலை நாட்களும் அதிகமாகியுள்ளன ; வேலை நேரம் தினசரி $6\frac{1}{2}$ மணியாகிறது ; முன்பு வாரத்திற்கு $30\frac{1}{2}$ மணியாக இருந்த வேலை நேரம் 39 மணியாகியுள்ளது ; $5\frac{1}{2}$ நாளாக இருந்த பாடசாலை நாட்கள் 6 நாட்களாகியுள்ளன ; ஆண்டுக்கு 220 நாட்களுக்குப் பதிலாக 240-க்கு மேற்பட்ட பாடசாலை நாட்கள் ஆகிறது : ஓய்வே இல்லாமல் ஆசிரியர்கள் வேலை செய்ய வேண்டியுள்ளது. எனவே, 5 ஆசிரியர்களுக்கு ஒரு 'எக்ஸ்டரா டீச்சர்' நியமித்துக்கொள்ள சர்க்கார் உத்தரவு பிறப்பித்தால்—தினம் ஒரு பீரியட் ஓய்வு கிடைப்பதுடன், பயிற்சி பெற்ற அல்லது பெறாத ஆசிரியர்களுக்கும் வேலை தரப்பட வேண்டும்.

(5) பாடசாலை நாட்களை 220-க்குக் குறைக்க வேண்டும்

(6) ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களில் உள்ள குறைபாடுகள் பற்றியும், பாடத்திட்டம் முதலியவை பற்றியும் அபிப்பிராயம் சொல்லும் உரிமையும் தரப்பட வேண்டும்.

(7) ஆரம்ப ஆசிரியர்கள் தேர்தலில் போட்டியிடும் உரிமை பிரஜா உரிமை தரப்பட வேண்டும்.

(8) ஆசிரியர்களுக்கு வேலை உத்தரவாதம் தரப்பட வேண்டும்.

(9) எஸ். எஸ். எல். சி. தேறிய லோயர் கிரேடு ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகக் கருதப்பட வேண்டும்

(10) சேலம் ஜில்லாவில் அரசியல் நடவடிக்கைகளின் பெயரால் ரத்து செய்யப்பட்டு உள்ள சர்டிபிகேட்டுகள் திருப்பித் தரப்பட வேண்டும்.

கனம் அமைச்சர் பதிலளிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ளவைகளைக் கவனிப்பதாகவும், ரத்து செய்யப்பட்ட சர்டிபிகேட்டுகளைத் திருப்பித் தருவது சம்பந்தமாக ஆச்சாரியார் பரிசீலனை செய்வதாகச் சொல்லி இருப்பதாகவும், இதுபோலவே மற்றவை சம்பந்தப்பட்டவைகளையும் கவனிப்பதாகவும் உறுதி கூறினர்.

சென்னை மாவட்ட கிளைக் கழகத் தோழர்கட்கு

இம்மாதம் 21-ந் தேதி விடுதலையான, தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு, 29—11—53 ஞாயிறு அன்று, எழும்பூர் அழகிரி திடலில், (டி. பி. ஆஸ்பத்திரி பின்புறம்) வரவேற்புக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று பகல் 2 மணிக்கு, எழும்பூர் ரயிலடியிலிருந்து மாபெரும் வரவேற்பு ஊர்வலம் கூட்டத் திடலை அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், சென்னையிலுள்ள எல்லாக் கிளைக் கழகங்களும் கலந்துகொண்டு ஊர்வலத்தை (தங்கள் தங்கள் கிளைக் கழகக் கொடிகளுடன்)யும், பொதுக் கூட்டத்தையும் சிறப்பிக்க வேண்டுமென சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் கேட்டுக்கொள்கிறார்.

குறிப்பு :— இந்த அறிக்கையில், நேற்றைய 'நம் நாடு' இதழில், தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் பெயர் விடுபட்டுப்போய்விட்டது குறித்து வருந்துகிறோம். —(ஆ-ர்)

ஏகாம்பரகுப்பத்தில் பொதுக்கூட்டம்

20—11—53ல், தோழர் என். ஏ. ரசீத் தலைமையில், தி. மு. கழக பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவரின் பேச்சுக்குப்பின், தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், புலவர் நாகரத்தினம் ஆகியோர் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்தும், ஆண்டவன் பெயரால் நடைபெறும் ஆபாசங்களை விளக்கியும், கல்லக்குடி வழக்கு நிதிக்கு மக்கள் நிதி தர வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தும் சொற்பொழிவாற்றினர்.

சலகண்டபுரத்தில் பொதுக்கூட்டம்

19—11—53ல், திரு. வி. க. திடலில், 'பகுத்தறிவு' ஆசிரியர் தோழர் ப. கண்ணன் தலைமையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் த. க. குருநாதன் பேசியபின், தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள், நெசவாளர்களுக்கு ஆச்சாரியார் சர்க்கார் ஆவன செய்ய இயலாத நிலைமைகளை விளக்கியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (தி, ஆலை நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.